00025

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை
EPU 5551 – ஆரம்பக் கல்வியில் கல்வித் தத்துவம்
பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.
மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : **12/02/2023** நேரம்: மு.ப 09.30 – பி.ப 12.30

## பகுதி I

1. அகர்வால் (2000) கல்வி எண்ணக்கருவின் சிக்கலான தன்மையில் தாக்கம் செலுத்தும் **நான்கு** (04) முக்கிய காரணிகளை குறிப்பிட்டுள்ளார். அவ் **நான்கு (04)** காரணிகளையும் குறிப்பிடுக.

2. கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.

3. கீழைத்தேய கல்வி தத்துவவியலாளர்கள் **மூவரை** (03) பெயரிடுக.

4. "கல்வித் தத்துவவியல் நோக்கினைப் புரிந்துகொள்வது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு முக்கியமானது" இக் கருத்தினை ஆதரிப்பதற்குரிய **ஐந்து** (05) காரணங்களைத் தருக.

5. பிள்ளைகளின் ஆற்றல், தேவைகள் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப கல்வி வழங்கப்படல் வேண்டும்" என ரூசோ குறிப்பிட்டுள்ளார். இக் கருத்தினை **மூன்று** (03) உதாரணங்கள் மூலம் விளக்குக.

6. 'வாழ்வதற்கான கற்றல்' என்பதன் அர்த்தமானது அன்றாட வாழ்க்கையில் கற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்துவதாகும். சுற்றாடலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் என்ற தலைப்பில் அன்றாட வாழ்க்கையில் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாக விளக்குக.

7. பிளேட்டோவினால் முன்மொழியப்பட்ட **மூன்று** (03) கலைத்திட்டங்களை எழுதுக.

8. சமூகமயமாக்கல் என்றால் என்ன? சமூக முகவர்கள் **மூவரைக்** (03) குறிப்பிடுக.

**(5x8= 40 புள்ளிகள்)**

## பகுதி II

09.

i. சமூக புலக்காட்சியின் அடிப்படையில் கல்வி தொழிற்பாடுகள் **ஐந்தினை (05)** சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. ஆசிரியர் என்ற வகையில் ஒவ்வொரு செயற்பாட்டையும் நிறைவேற்றுவதற்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையை எவ்வாறு ஒழுங்கமைக்கிறீர்கள் என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

10.

i. மகாத்மா காந்தியின் கல்வி எண்ணக்கருவின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

ii. தற்கால ஆரம்ப கல்விக் கலைத்திட்டம் மற்றும் ஆரம்ப கல்விக் கற்பித்தல் முறைகள் எந்தளவிற்கு ஒத்துப் போகின்றன என்பதை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.
(10 புள்ளிகள்)

11.

i. நாட்டின் தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் எதிர்கொள்ளும் ஐந்து (05) பிரச்சினைகளை கண்டறிந்து சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு ஆரம்ப கல்வி ஆசிரியராக உமது தீர்வுகளை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

12.

i. கல்வி மற்றும் பொருளாதார விருத்தி ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. பொருளாதார விருத்திக்கு கல்வியை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்பது குறித்து உமது கருத்தினை சமர்ப்பிக்குக.
(10 புள்ளிகள்)

13.

i. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சமூகமயப்படுத்தும் போது எதிர்கொள்ளும் சவால்கள் **மூன்றினை (03)** முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

**ii.** சமூகமயமாக்கலை மேம்படுத்துவதில் சகபாடிகளின் பங்களிப்பினை விளக்குக.
(10 புள்ளிகள்)

**பதிப்புரிமை பெற்றது**